

திருச்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவரங்கம் பகுதியில் பொதுக்குழு உறுப்பினர் செவ்வந்திலிங்கம் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கழக இரு வண்ணக் கொடியை ஏற்றினார். இதைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு வேஷ்டி,சேலை மற்றும் உணவு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் அன்பழகன், முசிறி சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி தியாகராஜன், சேர்மன் துரைராஜ், பகுதி செயலாளர் ராம்குமார் குமரேசன்,ரங்கன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்..








திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம் "கலைஞர் அறிவாலயம் "தளபதி அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார், இதில் கழக மகளிர் அணி துணைச்செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் ம.கணேஷ் தாராபுரம் (தனி), நா. தமிழ்ச் செல்வன் காங்கேயம், மணிசுந்தர் உடுமலைப்பேட்டை, அ.தமிழ்மறை மடத்துக்குளம் உள்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு தெற்கு மாவட்ட கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் வில்லரசம்பட்டியில் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி பரிசு கோப்பை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், ஆ.செந்தில்குமார், ப.க.பழனிச்சாமி, டி.எஸ்.குமாரசாமி, சு.குணசேகரன், வில்லரசம்பட்டி முருகேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், சுள்ளான் ராஜேந்திரன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் சங்கர் உள்ளிட்ட மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி!

# தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.23 -

தமிழ்நாடு 2012-13 முதல் 2020-21-ஆம் ஆண்டு வரையிலான முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது மாநிலத்தின் ஒட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து 2021-22 முதல் 2023-24-ஆம் ஆண்டு முடிய மூன்றாண்டுகளில் அடைந்த சராசரி வளர்ச்சி விகிதம் 8.08 சதவீதமாக உள்ளது என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு மற்றும் நிலையான விலையில் 2022-23 (விரைவுமதிப்பீடு)மற்றும் 2023-24 (முன்மதிப்பீடு) ஆம் ஆண்டுகளுக்குப் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மதிப்பிட்டுள்ளது.

இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்தால் ஒப்பளிக்கப்பட்ட முறைகள் மற்றும் ஒப்பீட்டுத் தரவுகளைப் பின்பற்றி மதிப்பிட்டுள்ளது. இந்தத் தரவுகள் அனைத்து மாநிலங்களுடன் ஆண்டு வாரியாக ஒப்பிடத் தக்கவை ஆகும். இவ்வகையில் தமிழ்நாட்டின் சாதனைகளை முந்தைய ஆண்டுகளின் செயல்திறனுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய உதவுகின்றன.

மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் சிறப்புக்கூறுகள் பின்வருமாறு:

1. தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலையில் 2022-23 ஆம் ஆண்டில் (விரைவு மதிப்பீடு) ரூ.14,51,929 கோடியாகவும், நடப்பு விலையில் ரூ.23,93,364 கோடியாகவும், 2023-24-ஆம் ஆண்டில் (முன்மதிப்பீடு) நிலையான விலையில் ரூ.15,71,368 கோடியாகவும், நடப்பு விலையில் ரூ.27,21,571 கோடியாகவும் இருந்தது.

2. தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 2022-23 ஆம் ஆண்டில் 8.13 சதவீதமாகவும், 2023-24-ஆம் ஆண்டில் 8.23 சதவீதமாகவும் நிலையான விலையில் இருந்தது, அதே நேரத்தில் நடப்பு விலையில் வளர்ச்சி விகிதம் 2022-23-ஆம் ஆண்டில் 15.48 சதவீதமாகவும், 2023-24-ஆம் ஆண்டில் 13.71 சதவீதமாகவும் இருந்தது.

3. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதம் நடப்பு விலையில் 2022-23-ஆம் ஆண்டில் 8.88 சதவீதமாகவும், 2023-24-ஆம் ஆண்டில் 9.21 சதவீதமாகவும் இருந்தது. நிலையான விலையில் 2022-23-ஆம் ஆண்டில் 9.03 சதவீத மாகவும், 2023-24-ஆம் ஆண்டில் 9.04 சதவீதமாகவும் இருந்தது.

### உள்நாட்டு உற்பத்தி மதிப்பு

4. தமிழ்நாடு, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில், 2022-23-ஆம் ஆண்டில் நடப்பு விலையில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக 2வது இடத்தில் உள்ளது. நிலையான விலையில், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு அடுத்தபடியாக 3வது இடத்தில் உள்ளது. 2023-24-ஆம் ஆண்டிற்குச் சில மாநிலங்களுக்கான மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவுகள் வெளியிடப்படாததால் ஒப்பீட்டுத் தரவரிசைகளை மதிப்பிட இயலவில்லை.

5. அகில இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் நிலையான விலையில் 2022-23-ஆம் ஆண்டில் 6.99 சதவீதமாகவும், 2023-24-ஆம் ஆண்டில் 8.15 சதவீதமாகவும் இருந்தது, அதே நேரத்தில் நடப்பு விலையில், வளர்ச்சி விகிதம் 2022-23-ஆம் ஆண்டில் 14.21 சதவீதமாகவும், 2023-24-ஆம் ஆண்டில் 9.60 சதவீதமாகவும் இருந்தது.

6. தமிழ்நாட்டின் பணவீக்க விகிதங்கள் 2022-23-ஆம் ஆண்டில் 5.97 சதவீதமாகவும், 2023-24-ஆம் ஆண்டில் 5.37 சதவீதமாகவும் இருந்தன. இதே காலகட்டத்தில் அகில இந்தியப் பணவீக்க விகிதங்கள் 6.65 சதவீதமாகவும் மற்றும் 5.38 சதவீதமாகவும் இருந்தன.

7. தமிழ்நாட்டின் சராசரி பொருளாதார வளர்ச்சி விகிதம் நிலையான விலையில் 2012-13 முதல் 2020-21 வரை 5.80 சதவீதமாக இருந்தது. 2021-22, 2022-23 மற்றும் 2023-24-ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சி விகிதங்கள் நிலையான விலையில் முறையே 7.89%, 8.13% மற்றும் 8.23% ஆக இருந்தன. இதன் விளைவாக 2012-13 முதல் 2020-21 வரையிலான முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து 2021-22 முதல் 2023-24 முடிய மூன்றாண்டுகளில் அடைந்த சராசரி வளர்ச்சி விகிதம் 8.08 சதவீதமாக ஆக உள்ளது.

8. தமிழ்நாட்டின் தலா வருமானம் நிலையான விலையில் 2022-23ஆம் ஆண்டில் ரூ.1,66,590 ஆகவும், 2023-24ஆம் ஆண்டில் ரூ.1,79,732 ஆகவும் இருந்தது. இந்தியாவின் தலா வருமானம் 2022-23ஆம் ஆண்டில் ரூ.99,404 ஆகவும், 2023-24-ஆம் ஆண்டில் ரூ.1,06,744 ஆகவும் இருந்தது. இவ்விரு ஆண்டுகளில், இந்தியாவின் தலா வருமானத்துடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டின் தலா வருமானம் 1.68 மடங்காக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு விலையில், தமிழ்நாட்டின் தலா வருமானம் 2022-23-ஆம் ஆண்டில் ரூ.2,77,802 ஆகவும் 2023-24-ஆம் ஆண்டில் ரூ.3,15,220 ஆகவும் இருந்தது. அகில இந்தியத் தலா வருமானம் 2022-23-ஆம் ஆண்டில் ரூ.1,69,496 ஆகவும் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.1,84,205 ஆகவும் இருந்தது. எனவே, தமிழ்நாட்டின் தலா வருமானம் 2023-24-ஆம் ஆண்டில் தேசியத் தலா வருமானத்தை விட 1.71 மடங்காக இருந்தது.

9. தமிழ்நாட்டில் முதன்மைத் துறையின் மொத்த மதிப்புக் கூடுதல், நிலையான விலையில் 2022-23-ஆம் ஆண்டில் ரூ.1,50,230 கோடியாகவும்,

2023-24-ஆம் ஆண்டில் ரூ.1,56,058 கோடியாகவும் இருந்தது. தமிழ்நாட்டின் மொத்த மதிப்புக் கூடுதலில் முதன்மைத் துறையின் பங்களிப்பு 2022-23-ல் 11.61 சதவீதமாகவும், 2023-24-ல் 11.18 சதவீதமாகவும் இருந்தது.

10. கால்நடைத்துறை, முதன்மைத் துறையின் மொத்த மதிப்புக் கூடுதலுக்கு நிலையான விலையில் அளித்த பங்களிப்பு 2022-23-ஆம் ஆண்டில் 48.99 சதவீதமாகவும் மற்றும் 2023-24-ஆம் ஆண்டில் 49.03 சதவீதமாகவும் இருந்தது.

11. மொத்த மதிப்புக் கூடுதலில் இரண்டாம் நிலைத் துறையின் பங்களிப்பு நிலையான விலையில் 2022-23 மற்றும் 2023-24-ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.4,83,328 கோடியாகவும் மற்றும் ரூ.5,18,619 கோடியாகவும் இருந்தது. இந்த இரண்டு ஆண்டுகளில் மாநில மொத்த மதிப்புக் கூடுதலில் இரண்டாம் நிலைத்துறையின் பங்களிப்பு முறையே 37.36 சதவீதமாகவும், 37.15 சதவீதமாகவும் இருந்தது.

12. உற்பத்தித் துறை, இரண்டாம் நிலைத் துறைக்கு 65 சதவீதம் பங்களித்து 2022-23 மற்றும் 2023-24-ஆம் ஆண்டுகளில் வலுவான வளர்ச்சியைக் கண்டது.

உற்பத்தித் துறை, மாநில மொத்த மதிப்புக் கூடுதலுக்கு அளித்த பங்களிப்பு 2022-23 ஆண்டில் 24.44 சதவீதமாகவும், 2023-24-ஆம் ஆண்டில் 24.10 சதவீதமாகவும் இருந்தது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், உற்பத்தித் துறையின் பங்களிப்பு, நிலையான விலையில், முறையே 9.29 சதவீதம் மற்றும் 6.37 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

13. தமிழ்நாட்டில் பணித் துறையின் மொத்த மதிப்புக் கூடுதல், நிலையான விலையில் 2022-23-ஆம் ஆண்டில் ரூ.6,60,230 கோடியும், 2023-24-ஆம் ஆண்டில் ரூ.7,21,309 கோடியும் ஆகும். இந்த இரண்டு ஆண்டுகளில் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பணித் துறையானது 45.47 சதவீதமும், 45.90 சதவீதமும் பங்களித்தது. 2023-24-ஆம் ஆண்டில் பணித் துறை நிலையான விலையில் 9.25% வளர்ச்சியடைந்துள்ளது. போக்குவரத்து, சேமிப்பு கிடங்கு மற்றும் தகவல் தொடர்பு துறைகளில் 8.76%, பிறவகை போக்குவரத்துத்துறையில் 7.46%, நிதித் தொடர்பான பணிகளில் 9.29%, கட்டடமனை துறையில் 10.08%, பிறவகைப் பணிகளில் 9.96% என வளர்ச்சிக் காணப்பட்டது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பணித் துறை குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கியுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அறநிலையத்துறை சார்பில் திருமணம் நடத்தி வைத்ததின் மூலம்

# ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மணமக்களின் வாழ்வில் முதலமைச்சர் ஒளியேற்றி வைத்துள்ளார்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!



புதுக்கோட்டை, அக். 23 -

முதலமைச்சர் அவர்கள் (21.10.2024) அன்று சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை திருவப்பூர் அருள்மிகு முத்துமாரி யம்மன் திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், இணைகளுக்கு திருமணத்தை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (21.10.2024) அன்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் பொருளாதாரம் உயரும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையில் சார்பில் திருக்கோயில்களில் ஏழை, எளிய குடும்பங்களை சார்ந்த மணமக்களுக்கு திருமணங்கள் நடத்தி, சீர்வரிசை பொருட்களை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அந்தவகையில், இந்த அரசு பொறுப்பேற்றபின், 2022-2023 ஆம் நிதியாண்டில் 500 இணைகளுக்கும், 2023 - 2024 ஆம் நிதியாண்டில் 600 இணைகளுக்கும் என மொத்தம் 1,100 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

2024-2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் "பொருளாதாரத்தில் பின்தங்கிய 700 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதற்கட்டமாக சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (21.10.2024) அன்று திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார்கள். சென்னை உட்பட மாநிலம் முழுவதும் இன்று மட்டும் மொத்தம் 379 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

மேலும், இணைகளுக்கு மாங்கல்யத்துடன் சீர்வரிசைப் பொருட்களாக கட்டில், பீரோ, மெத்தை, தலையணைகள், சமையல் எரிவாயு அடுப்பு, வெட்கிரைண்டர், மிக்சி, குக்கர், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில், திருவப்பூர் அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயிலில் 4 இணைகளுக்கும், கொன்னையூர் அருள்மிகு முத்துமாரி யம்மன் திருக்கோயிலில் 3 இணைகளுக்கும் என மொத்தம் 7 இணைகளுக்கு திருமணங்களை நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏழை, எளிய குடும்ப ங்களைச் சார்ந்த மணமக்களின் வாழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒளியேற்றி வைத்துள்ளார்கள்.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா ,

மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத் துறை) தி.அனிதா, மாவட்ட அறங்காவலர் குழுக் தலைவர் தவ.பாஞ்சாலன், செயல் அலுவலர்கள் சந்திரசேகரன் (பேரம்பூர்), முத்துராமன் (புதுக்கோட்டை திருக்கோயில்கள்), முத்துகுமார் (திருபுனவாசல்), வட்டாட்சியர் பரணி, ஆய்வாளர்கள் யசோதா (குளத்தூர்), புவனேஸ்வரி (திருமயம்), வானதி (இலுப்பூர்), தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை, மாமன்ற உறுப்பினர் (திருவப்பூர்) கனகம்மன்பாபு திருப்பணிக்குழு செல்வராஜ், க.மதியழகன் உள்ளாட்சி அமைப்புகளின்

பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கணக்கன் குப்பம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட ரேஷன் கடையை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்கள் வழங்கினார் . அருகில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றியச் செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன் உள்ளனர்



கிருஷ்ணகிரி வட்டம், காட்டிநாயனப்பள்ளி அருள்மிகு ஆஞ்சநேய சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத்துறை மூலம், திருக்கோயில் சார்பில் 9 இணைகளுக்கு திருமணத்தை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் மாவட்ட ஆட்சியர் சரயு முன்னிலையில் நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் ஜோதிலட்சுமி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினிசெல்வம் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சின்னசாமி, சின்னராசு, விஜயகுமார், கலைவாணி, மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், ஒன்றிய செயலாளர்கள் தனசேகர், கோவிந்தன், அறிஞர், ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திருச்சி சமயபுரத்தில் இந்து சமய அறநிலை துறையின் சார்பில் சுமார் 29 இணையர்களுக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற எம்.பி. அருண் நேரு தலைமை ஏற்று, மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் முன்னிலையில் திருமணத்தை நடத்தி வைத்தார் நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் சமயபுரம் ராஜசேகர், அறங்காவல் குழு தலைவர் இளங்கோவன் ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், லட்சுமணன், துரை பாண்டியன் ,சார்லஸ் மற்றும் அறங்காவல் குழு உறுப்பினர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்